# செ.வெ.எண்: 55 நாள்: 28.07.2016

## புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் இன்று (28.06.2016) நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று துவக்கிவைத்து பேசியதாவது:-

விவசாயிகள் குறைகளை மனுக்களாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகாண விவசாயிகள் குறைதீர்க்கும் பிரதி மாதம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் தக்கைப்பூண்டு மானியத்தில் வழங்க கோரி, தோட்டக்கலைத்துறையின் மூலம் குழாய் வழங்க கோரி, புதிய மின் இணைப்பு வழங்க கோரி, இன்சூரன்ஸ் கணக்கு புத்தகம் வழங்க கோரியும் என வரப்பெற்ற 35 மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையளவைப் பொறுத்த அளவில் ஜூலை 2016ம் மாதத்தில் இயல்பான மழையளவான 43.69 மி.மீக்கு, இதுவரை பெறப்பட்ட மழையளவு 46.14 மி.மீ ஆகும். நடப்பு 2016 ஆண்டுக்கு இம்மாதம் வரை பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவான 213.74மி.மீக்கு இதுவரையில் பெறப்பட்ட மழையளவு 157.85 மி.மீ ஆகும். நடப்பாண்டு நெல் 742 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 202 எக்டர் பரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 339 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 686 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 49 எக்டர் பரப்பளவிலும், தென்னை 9338 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 174.78 மெ.டன் நெல் விதைகளும், 17.345 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 11.093 மெ.டன் தற்சமயம் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.07.2016) அறந்தாங்கி வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு சம்பா மசூரி (ஙீவு 5204) ரகத்திற்கு மாற்றாக குலை நோய் எதிர்ப்பு திறன் கொண்ட டி.கே.எம் 13 நெல் ரகத்தினை வழங்கினார்.

விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யூரியா உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு ஏதுவாக உரிய முயற்சிகள் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுரைக்கு ஏற்ப வோளண்மை துறை மற்றும் கூட்டுறவுத்துறை ஆகியவர்கள்ளின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 3765 மெ.டன்னும், டிஏபி 787 மெ.டன்னும், பொட்டாஷ் 934 மெ.டன்னும், 1569 மெ.டன் காம்பளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வரப்படுகிறது.

மாவட்டத்தில் சிறு தானிய பயிர்களான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, வரகு மற்றும் குதிரைவாலி விதைகள் போதுமான அளவு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சிறு தானியங்கள் இயக்க திட்டத்தின் கீழ் சிறுதானிய விதைகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் இதனை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தரமான விதைகளை விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் நோக்கத்தில் விதை கிராமத் திட்டத்தில் அனைத்து ரக நெல், பயறு வகை மற்றும் நிலக்கடலை விதைகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. நெல் விதைக்கு ஒரு கிலோவிற்கு ரூ.10/-, பயறு வகை விதைகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25/- மற்றும் நிலக்கடலை விதைக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் வீதம் விதைகள் வநியோகம் செய்யப்படுகிறது.

தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம் (அரிசி) 2016-17 திட்டத்தின் கீழ் நெல் விதைப்பு கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்ப தொகுப்பு செயல் விளக்கங்கள் 500 எக்டர் பரப்பளவில் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி மற்றும் அரிமளம் வட்டாரங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. செயல்விளக்கத்திற்கு தேவையான இடுப்பொருட்களான நெல்விதை,

நுண்ணுயிர் உரங்கள், நெல் நுண்ணூட்ட கலவை ஆகியவை வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானியத்தில் வழங்கப்படும் விதைப்புக்கருவி வாடகை, பொட்டாசியம் குளோரைடு, வரப்பு பயிர் துவரை விதைகள், அசாடிரக்டின் கலைக்கொல்லி போன்ற இடுப்பொருட்களுக்கு விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு எக்டர் செயல் விளக்கத்திற்கு ரூ.7500 மானிய மதிப்பிலான இடுப்பொருட்கள் வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 2 எக்டர் பரப்பளவிற்கு மானியம் வழங்கப்படும். இது குறித்த மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொள்ளலாம்.

..2..



தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் (நெல்) 2016-17 திட்டத்தின் கீழ் இயந்திர நெல் நடவு தொழில்நுட்பத்தினை பரவலாக்கச் செய்யும் நோக்கத்தில் இயந்திர நெல் நடவு தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 1 எக்டருக்கு ரூ.5000 மானியம் வழங்கப்படுகிறது. இம்முறையில் பாய் நாற்றங்கால் அமைத்து நெல் நடவு இயந்திரம் நடவு செய்யப்பட வேண்டும். இயந்திர நெல் நடவு தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி நெல் சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொள்ளலாம்.

மரஎண்ணெய் பயிர்களில் பரப்பினை அதிகரிக்கும் நோக்கத்தில் தேசிய எண்ணெய் வித்து இயக்கத் திட்டத்தில் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களில் வேம்பு மற்றும் புங்கம் மரக்கன்றுகளை நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. வேம்பு மரக்கன்றுகள் நடவிற்கு 1 எக்டருக்கு அதிகபட்சமாக ரூ.17000 பின்னேற்பு மானியமும் (400 கன்றுகள்/எக்டர்) புங்கம் மரக்கன்றுகள் நடவிற்கு 1 எக்டருக்கு ரூ.20000 பின்னேற்பு மானியமும் வழங்கப்படுகிறது. இதுகுறித்த மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொள்ளலாம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறந்தாங்கி வட்டாரத்தை சேர்ந்த 13 விவசாயிகளுக்கு சம்பா மசூரி (BPT 5204) ரகத்திற்கு மாற்றாக குலை நோய் எதிர்ப்பு திறன் கொண்ட டி.கே.எம் 13 நெல் ரகத்தினை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.பால்வடிவு, சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) திரு.மனோகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.அருணாச்சலம், வேளாண் அலுவலர் திரு.பூபதி மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**